24th March 1961]

SRI R. SRINIVASA IYER : ஸார், ∴.பேப்ரிகேட்டர்ஸ் என்று லைஸெனஸ் வாங்கிக்கொண்டு இரும்பு ரா மெட்டீரில் வாங்கி ∴.பேப்ரிகேட் செய்யாமல் கம்பியாக இருந்தால இரண்டாக வெட்டி, வேறு மற்றவைகளாக இருந்தால் அப்படியே ப்ளாக் மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள். அதனால் தான் அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸ் கிடைக்கவில்லை. லைஸென்ஸ் வைத்திருப்பவர்கள் வாங்கும் சாமானை ∴.பேப்ரிகேட் செய்கிறார்களா என்று விசாரிக்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் கைத்தொழில் இலாகா அப்போதைக்கப்போது பரிசீலனை செய்து வருகிறது. அது மாத்திரம் போதாது. மக்களிடத்தில் விழிப்பு வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்களும் இதைப்பற்றி கண்காணித்து யாராவது தவறு செய்தால் அந்த மாதிரி ஒன்றிரண்டு கேஸ்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளபபடும். அதன் மூலமாக நிலைமை மாறலாம்.

Oil resources

* 1066 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey was conducted to explore oil in the Kanyakumari district; and

(*b*) if so, when and the results thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 1067 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரி நதியின் ஓரத்தில் எண்ணெய் வள ஆராய்ச்சி சம்பந்தமாக இந்திய சர்க்காருக்கு ருமேனிய நிபுணர்களை அளித்து உதவத் தயாராய் இருப்பதாக, அந்த நாட்டு வர்த்தக மந்திரி கூறியிருப்பதை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ? இல்லையானால் காரணமென்ன ?

(இ) வேறு எந்த நாட்டின் உதவியாவது நமக்கு இந்த ஆராய்ச்சிக்குக் கிடைத்திருக்கிறதா ? அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have no information in the matter.

SRI A. VEDARATHNAM : ஸார், இப்போது இந்த எண்ணெய் வள ஆராய்ச்சியை நடத்தி வருவது எந்த நாட்டினரால் ? ருமேனிய அரசாங்கத்தார் இந்த விஷயத்தில் நமக்கு உதவி புரிவதாகக் கோரியதை நம்மிடம் நேரே கேட்கவில்லை என்றால், மத்திய அரசாங்கத்தின் மூலமாக அணுக வேண்டிய காரணத்தால், அவர்களை அணுகி என்ன சொன்னார்கள் என்ற விஷயமாவது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அவர்கள் இதைப்பற்றி ஏதாவது கேட்டு அறிந்து கொண்டார்களா ? 9–30 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது காவேரி நதி பேசினிலே ஆராய்ச்சியை நம்மவர்கள் செய்கின்றார்கள். ருமேனியா அரசாங்கத்தைப் பற்றிய விவரம் இந்த ராஜ்ய சர்க்காருக்குக் கிடையாது.

SRI K. VINAYAKAM : Sir, may I know from out of the researches made so far has it ever been established that there are oil resources in the Cauvery Basin?